# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 8/2023

### அ.சா. 8 (LW 11 )

| பெயர் | சோபனா | தொழில் | கிராமநிர்வாக அலுவலர் |
|---|---|---|---|
| த/க பெயர் | இளையராஜா | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நிலக்கோட்டை தாலுகா ஒருத்தட்டு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.06.2022 அன்று அதே ஒருத்தட்டு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது அம்மையநாயக்கனூர் காவல் ஆய்வாளர் என்னை போன் மூலம் அழைத்து சடையாண்டி புரம், குகாஸ் ஓட்டல் அருகே வரும்படி காலை 06.00மணி அளவில் கூப்பிட்டார். நானும் என் உதவியாளர் விஜயராஜா என்பவரும் போனோம். அங்கு போன போது ராஜ்குமார் என்பவர் கொலை சம்மந்தமாக மனோஜ்குமார்,அன்பழகன் ஆகியோர்களை கைது செய்திருப்பதாகவும், அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்ய இருப்பதாகவும் அதற்கு சாட்சியாக இருக்கும்படி எங்களிடம் கேட்டார். நாங்கள் சம்மதம் தெரிவித்தோம். அதே இடத்தில் வைத்து மனோஜ் என்ற எதிரி சொன்ன வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். கொலை செய்ய பயன்படுத்திய அரிவாள் மற்றும் அவர் அணிந்திருந்த ஆடைகள் ஆகியவற்றை தளிப்பாலம் அருகில் சர்வீஸ் ரோடு பாலத்திற்கு அடியில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். அதை ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். எதிரி மனோஜ்குமாரின் **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அத.ச.ஆ.4. ஆகும்.** அதன்படி நாங்கள் தளிப்பாலம் அருகில்

சர்வீஸ் ரோடு பாலத்திற்கு அருகில் போன போது அந்த பாலத்தின் அடியிலிருந்து அரிவாள்-1, கம்பி-1, இரண்டு ஆடைகள் எடுத்துக் கொடுத்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.5. ஆகும்.** என்னிடம் காட்டப்படும் பொருட்களான கம்பி, அரிவாள் துணிகள் இவைகள்தானா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

மேலும் சடையாண்டிபுரம் குகாஸ் ஓட்டல் அருகே எதிரி அன்பழகன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அவர் தன்னை அழைத்துச் சென்றால் மறைத்து வைத்திருக்கின்ற கம்பியையும் ஆடைகளையும் எடுத்து தருவதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். எதிரி அன்பழகன் **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அத.ச.ஆ.6. ஆகும்.** அதன்படி நாங்கள் தளிப்பாலம் அருகில் சர்வீஸ் ரோடு பாலத்திற்கு அருகில் போன போது அந்த பாலத்தின் அடியிலிருந்து கம்பி-1, இரண்டு ஆடைகள் எடுத்துக் கொடுத்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.7 . ஆகும்.** என்னிடம் காட்டப்படும் பொருட்களான கம்பி, அரிவாள் துணிகள் இவைகள்தானா என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

ஆய்வாளர் என்னை அழைத்த போது நான் என் வீட்டில் இருந்தேன் எனது வீட்டிற்கும் நான் போலிசாரை சந்தித்த இடத்திற்கும் இடையே 3 கி மீ தூரம் இருக்கும் நாங்கள் அந்த இடத்திற்கு போவதற்கு முன்பாகவே போலிசார் 2 எதிரிகளையும் பிடித்து வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அதனால் அந்த இருவரையும் எப்போது போலிசார் பிடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலங்கள் இரண்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 ஒப்புதல் வாக்கு மூலங்களையும் காவல்நிலையத்தில் வைத்து கணிணியில் தட்டச்சு செய்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். குகாஸ் ஓட்டலுக்கும் அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்திற்கும் இடையே 3 கி மீ தூரம் இருக்கும். முதலில் ஒரு எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கி தட்டச்சு செய்த பிறகு ஒரு எதிரியிடம் கையெழுத்து வாங்கி அதன் பின்பு எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் அதன்பிறகு மற்றொரு எதிரியிடம் ஒப்புதல்

வாக்குமூலம் வாங்கி தட்டச்சு செய்த பிறகு ஒரு எதிரியிடம் கையெழுத்து வாங்கி அதன் பின்பு எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 2 ஒப்புதல் வாக்கு மூலத்திலும் எதிரிகள் கையொப்பம் போட்ட இடத்திற்கு கீழே இருந்த கையொப்பங்கள் ஒயிட்னர் போட்டு அழிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை ஒரு முறைதான் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு என்னை விசாரித்த போது மேற்படி எதிரிகளின் கையொப்பங்கள் அழிக்கப்பட்டது சம்மந்தமாக என்னிடம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். 2 ஒப்புதல் வாக்குமூலத்திலும் நான் கையொப்பம் போடும் போது மேற்படி எதிரிகளின் கையொப்பங்களில் திருத்தங்கள் இல்லை என்றால் சரிதான். குகாஸ் ஓட்டலிருந்து தனி சர்வீஸ் ரோடு சுமார் 1/2 கிமீ தூரத்தில் உள்ளது. எதிரி அன்பழகன் எடுத்து ஆஜர் செய்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் ஒரு முள்கம்பி கைப்பற்றியதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இன்று நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்பட்டுள்ள பொருட்களில் மேற்படி முள்கம்பி இல்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன முறையில் போலிசாரால் நான் அழைக்கப்படவில்லை என்றும் எங்கள் முன்பாக மேற்படி 2 எதிரிகளும் விசாரிக்கப்படவில்லை என்றும் அதன் அடிப்படையில் அவர்கள் எங்கள் முன்பாக ஆய்வாளரிடம் எந்தவித ஒப்புதன்ல வாக்குமூலம் கொடுத்து அரிவாளோ, கம்பியோ, ஆடைகளோ எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும் அவைகளை எங்கள் முன்பாக அத்தாட்சியில் கைப்பற்றவில்லை என்றும் நான் சொன்ன ஆவணங்களை வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டு என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. பொருட்கள் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.17 08:52:34 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.